1974 மார்ச் 11]

மேலப்பாளையம் உயர்நிலைப்பள்ளி.

*355 வினா—திரு. க. உரொ. எட்மண்ட் : மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையத்திலுள்ள முஸ்லீம் உயர்நிலைப்பள்ளி எந்த ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது ?

(இ) அப்பள்ளிக்கு அரசின் அங்கீகாரம் கொடுக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதன் காரணம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் :

(அ) 1945-ஆம் ஆண்டு ஜூன் திங்களில் ஆரம்பிக்கப்பட்டது.

(இ) 1967–68-ம் ஆண்டு முடிய தற்காலிக அங்கீகாரம் வழங்கப் பட்டது அதன் பிறகு தொடர் அங்கீகாரம் வழங்கப்படவில்லை.

(உ) அங்கீகாரம் வழங்கப்படுவதற்கு தேவைப்படும் முக்கிய நிபந் தனைகளை பள்ளியின் நிர்வாகத்தினர் நிறைவேற்றவில்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, 1945–வது ஆண்டிலே தொடங்கப்பட்ட இந்த உயர்நிலைப் பள்ளிக்கு 1967-வது ஆண்டு வரையிலே அங்கீகாரம் அளிக்கப்படவில்லை என்பது விந்தையாக இருக் கிறது. அந்தப் பள்ளியின் நிர்வாகஸ்தர்கள் ஒழுங்காக நிர்வாகிக் காததாலே, மாணவர்களின் எண்ணிக்கை படிப்படியாகக் குறைந்து வருகிறது.

மேலும் 60,000 முஸ்லீம்கள் வாழக்கூடிய மேலப்பாளையத்திலே ஒரே ஒரு முஸ்லீம் பள்ளி தான் இருக்கிறது. அரசே அப்பள்ளியை என் எடுத்துக் கொள்ளக்கூடாது, அல்லது அதனை செம்மைப்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை என் எடுக்கக்கூடாது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : அங்கீகாரம் வழங்கப் படாது இருப்பதிலே விந்தை இல்லை. நிபந்தனைகள் 20 ஆண்டுகளாக நிறைவேற்றப்படாமல் இருப்பதுதான் விந்தையாக இருக்கிறது. பள்ளியில் விளையாட்டு நிலம் மாணவர்கள் உபயோகிக்க ஏற்றதாக சரி செய்யப்பட வில்லை. பள்ளிக்கு இடவசதி, தளவாடங்கள் போதிய அளவு வழங்கப் படவில்லை ; அறிவியல் கூடம் அமைக்கப்படுவதற்காகக் கட்டப்பட்ட கட்டி டத்தில் நடத்தப்பட்டு வரும் வகுப்புகளை வேறு கட்டிடத்திற்கு மாற்றி அறிவியல் கூடத்தைப் பயனுள்ள வகையில் உபயோகப்படுத்த வழி செய்யவில்லை ; அப்பள்ளியின் தலைமை ஆசிரியரைப் பள்ளியின் நிர்வாகக் குழுவின் பதவி வழி வந்த உறுப்பினராகச் சேர்க்கவில்லை ; முன்னாள் ஆசிரியர் திரு. முத்துக்குமாரசாமி அவர்களுக்குச் சேரவேண்டிய நிலுவை ஊதியத்தை வழங்கவில்லை : அபாயகரமாக இருக்கும் பள்ளியின் கட்டி டத்தை பழுது பார்த்து கட்டிட உறுதிச் சான்றிதழைப் பெற்று அனுப்ப வில்லை ; பள்ளியின் நிர்வாக நிதிக்கும், அபிவிருத்தி நிதிக்கும் பள்ளி யின் பெயரில் தனிக் கணக்குகள் வைக்கப்படவில்லை. ஆகையால் தான்

அங்கீகாரம் அளிப்பதிலே சங்கடம் ஏற்படுகிறது. அரசு அனுப்ப வேண்டிய மானியம் தாளாளருக்கு அனுப்பப்படவில்லை. தலைமை ஆசிரியர் மூலமாக, பணம் வழங்கப்பட்டு வருகிறது. அந்தத் தாளாளர் மீது, தமிழ்நாடு கல்வி விதி 99 (எ) ன்படி தக்க நடவடிக்கை எடுக்கத் தேவையான ஆதாரங்களுடன் குற்றச்சாட்டுக் குறிப்பு வரைவு தயாரித்து இயக்குநரின் ஒப்புதலுக்கு அனுப்பும்படி நெல்லை (நடு) மாவட்டக் கல்வி அலுவலர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். ஆனால், அந்தப் பள்ளிக் கூடத்தை இப்பொழுது அரசாங்கம் எடுத்துக் கொள்வதற்குச் சட்டத்திலே இடம் இல்லை. புதிய சட்டத்தின் அடிப்படையிலேதான் நாம் முயற்சியை மேற்கொள்ளவேண்டும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவர் அவர்களே, இந்த மேலப்பாளையம் முஸ்லிம் உயர்நிலைப்பள்ளி, அங்குள்ள சிறுபான்மை மக்களுக்குப் பெரும்பாலும் பயன்படுகிறது. ஆகவே, சிறுபான்மையோரை ஆதரிக்கின்ற வகையில் சில நிபந்தனைகளைத் தளர்த்தி அங்கீகாரம் அளிக்க அரசு இனிமேலாவது முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, இவற்றிலே எதுவும் தளர்த்தக்கூடிய நிபந்தனைகள் அல்ல. ரூ. 80,000 கட்ட வேண்டும், அதனைத் தளர்த்தி ரூ. 20,000 கட்டச்சொல்லுங்கள், ஒரே தடவையில் கட்டுவதற்குப் பதிலாக, 5 தடவையாகக் கட்ட அனுமதியுங்கள் என்று சொன்னால், அந்த விதிகளைத் தளர்த்தலாம். ஆனால், இதில் உள்ள விதிகளைத் தளர்த்த முடியாது. ஆகவேதான் நேரடியாக தலைமை ஆசிரியர் மூலமாகச் சம்பளத்தைத் தருகிறோம். சிறுபான்மையோர் பள்ளியாக இருப்பதால், புதிய சட்டத்தின்படி கூட அரசாங்கம் எடுத்துக்கொள்ள வழி இல்லை.

திரு. கே. எ. வகாப்: நிபந்தனைகளைத் தளர்த்த இயலாது என்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். அப்பள்ளி பொருளாதாரச் சிக்கலிலே சிக்கித் தவித்துக் கொண்டிருக்கிறது. ஆகவே, அரசாங்கம் தனிக் கருணை வைத்து, பொருளாதார உதவி அளித்து, அப்பள்ளி நிர்வாகம் நல்ல முறையிலே நடப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: தலைவர் அவர்களே, அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியாதே தவிர, அவர்களாகத் தந்துவிடுவார்களானால், அரசாங்கம் அதுபற்றி யோசிக்கலாம்.

அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்.

*356 வினா—திரு. த. சோனையா: மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், திருப்புவனம் ஊராட்சி ஒன்றியம் டி. ஆலங்குளம் அரிசனங்களுக்கு மனைப்பட்டா வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், அரிசனங்களுக்கு அங்கு குடியேற தடை ஏதுவும் ஏற்பட்டுள்ளதா ?